09-05-2014 The Hindu Tamil






ஜாய்ஃபுல் சிங்கப்பூரா.. கலர்ஃபுல் மலேசியாவா? அதையெல்லாம்விட அசத்தலாக ஜொலிப்பது நம்ம சிங்காரச் சென்னைதான். சென்னையில் மெட்ரோ ரயில் பணிகள் விறுவிறுப்பாக நடந்துவருகின்றன. வேலைகள் இரவு பகலாக நடக்கின்றன. வியாழக்கிழமை ஒரே தண்டவாளத்தில் அடுத்தடுத்து 2 ரயில்கள் இயக்கி சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. மின்விளக்கு ஒளியில் நகரமெங்கும் ஜொலிக்க, பாலத்தில் ஒன்றன்பின் ஒன்றாக மெட்ரோ ரயில்கள் பயணிக்கும் வண்ணமிகு காட்சி. இடம்: கோயம்பேடு மார்க்கெட் அருகே. படம்: ம.பிரபு